DINAMALAR 25 NOV 09

தினமலர் கோயம்புத்தூர் 25-11-2009

# பள்ளி ஆசிரியர்களுக்கான யோகா பயிற்சி நிறைவு

**கோவை, நவ. 25 -**

மாநகராட்சி பள்ளி ஆசிரியர்களுக்கான யோகா பயிற்சி நிறைவு விழா, சித்தாபுதூர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் நடந்தது.

மாநகராட்சி பள்ளிகளில் பணியாற்றும் 500 ஆசிரியர்களுக்கு 'ஈஷா யோகா மையம்' சார்பில், கடந்த 12 நாட்களாக, சித்தாபுதூர் மாநகராட்சி பள்ளி, ராமகிருஷ்ணாபுரம் உயர்நிலைப்பள்ளி, ஆர்.எஸ்.புரம் அம்மணியம்மாள் பள்ளியில், யோகா பயிற்சி அளிக்கப்பட்டது.

இதன் நிறைவு விழா, சித்தாபுதூர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் நடந்தது. பயிற்சியின் பயன்பாடு குறித்து ஆசிரியர்கள் ஆனந்தி, கபாலீஸ்வரன் ஆகியோர் பேசினர்.

பயிற்சியளிக்கப்பட்ட விதம் குறித்து, ஈஷா யோகா மையத்தின் தலைமை செயல் அலுவலர் பாலமுருகன் பேசினார்.

மாநகராட்சி கமிஷனர் அன்சுல் மிஸ்ரா, மேயர் வெங்கடாசலம், துணை மேயர் கார்த்திக், கல்விக் குழு தலைவர் கல்யாணசுந்தரம் உள்பட பலர் பங்கேற்றனர்.